முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.09.2025) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 2 விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி வரிசையையும் தொடங்கி வைத்து, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கு அந்நிறுவனத்தில் பணியாற்றிட பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோபிநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய். வழிகாட்டி நிறுனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சி. தினேஷ் குமார், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிங்க் செங், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தாய்லாந்து நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் NG, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தைவான் நிறுவனத்தின் துணைத் தலைவர் மார்க் கோ, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் பென்ஜமின் லின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.09.2025) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 450 கோடி ரூபாய் முதலீட்டில் 400-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 2 விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி வரிசையையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோபிநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய். வழிகாட்டி நிறுனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சி. தினேஷ் குமார், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிங்க் செங், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தாய்லாந்து நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் NG, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தைவான் நிறுவனத்தின் துணைத் தலைவர் மார்க் கோ, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் பென்ஜமின் லின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஜெர்மனி – இங்கிலாந்து பயணத்தில் தொழில் முதலீடுகளை ஈர்த்து வந்த முதலமைச்சருக்கு பாராட்டு!

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் - அண்ணா பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்: அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!

கடலூர், செப்.13- கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 1109 2025, வியாழக் கிழமை, காட்டு மன்னார்கோவில், எம்.ஆர்.கே கலையரங்கத்தில், கழக தேல் தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

தொகுதி பார்வையாளர்கள் ஏ.அங்கையற்கன்னி, விஜயன் ராம கிருஷ்ணன், சுவை.சுரேஷ், எம்.எம். சிவா,அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை. கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி. கதிரவன், மாவட்ட துணை செயலாளர்கள் அ.ஞான முத்து,ஆர்.சக்திவேல், ஆகி யோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட கழக செயலாள ரும் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர் மானங்கள் நிறைவேற்ற ப் பட்டன

இந்திய துணை கண்டத்தில், தமிழ்நாட்டை அனைத்து துறை களிலும் முதன்மை மாநிலமாக உருவாக்கி முதல்வர்களின் முதல்வராய் அனைவராலும் பாராட்டும் பெற்று உழைப் பின் உயர்வாய் திகழும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ் நாடு முதல்வர் தளபதி அவர் கள், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சென்று வந்த பயணம் முதலீடுகளை ஈர்ப்பதிலும் தமிழ் வழி வளர்ச் சிகளுக்கும் வெற்றி பயணமாக அமைந்துள்ளது.

15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் முதலீடுகளை நிர்வாகத் திறனால் திராவிட மாடல் அர சின் தொழில் நலத்திட்டங்க ளால் பெற்று, 17 ஆயிரத்து 613 பேருக்கு மேல் வேலை வாய்ப்பு இணையும் வழங்குகின்ற பெரு மைமிக சாதனை படைத்துள் ளார்.

மேலும் முத்தமிழர் என்ற கலைஞரின் தமிழ் உணர்வின் வடிவமாக, ஜெர்மன் கொலோன் பல்கலைக் கழகத் தின் தமிழ்த்துறை நூலகத்தின் பாதுகாப்பாய், வளர்ச்சியாய் 2021ல் 1.25 கோடி ரூபாய் மற் றும் கடந்த ஜூலையில் ரூபாய் 1 கோடி 64 ஆயிரம் திராவிட மாடல் அரசின் சார்பாக அளித்து தாய் மொழி காப்பாள ராம் தலைவர் முதல்வர் தளபதி நேரடியாக சென்று பார்த்து பல் கலை பேராசிரியர்களின் தமி ழர்களின் பாராட்டைப் பெற் றுள்ளார்.

ஈடு இணையில்லா சாதனை களை செய்து உலகப் புகழ் பெற்று வருகை புரிந்துள்ள, இயக்கத்தின் இயக்கமான கழ கத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களை வணங்கி, நன்றி கூறி மாவட்ட கழகம் பெருமை யுடன் தீர்மானம் நிறை வேற்று கிறது.

செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை மாவட்டம் முழுவதும் மாநக ரம், நகரம்,ஒன்றியம், பேரூர், ஊராட்சி பகுதிகளில் கொடி ஏற்றி மக்கள் நலத்திட்ட உதவி கள் செய்து சிறப்பாக கொண் டாடுவது என முடிவு செய்யப் பட்டது.

திருமிகு கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் தலைமையில் செப் டம்பர் 17 அன்று கரூர் மாநக ரில் மாபெரும் முப்பெரும் விழா நடைபெற உள்ளது. அந்த திராவிட திருவிழா நிகழ்வில் மாவட்டத்தின் பெருமைமிகு செயலாளர் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் பாசமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் ஆணை ஏற்று, மாவட்டம் முழுவதிலும் இருந்து அனைத்து நிர்வாகி களுக்கும் அணிகளின் பொறுப் பாளர்களும் தொண்டர்களும் பெருந்திரலாக கலந்து கொள் வது என தீர்மானிக்கப்பட்டது.

தலைமைக் கழக அறிவிப் பின்படி மாவட்டத்தின் அனைத்து சட்டமன்ற தொகுதி களிலும் ஓரணியில் தமிழ்நாடு சிறப்பாக செயல்படுத்தப்பட் டுள்ளது. அதேபோன்று மாவட் டச் செயலாளர் அவர்களின் ஆலோசனை வழிகாட்டுதல் தேர்தல் பணி பொறுப்புகளில் கழகத் தோழர்கள் தீவிரமாக செயல்படுகிறார்கள். தற்பொ ழுது பனிக்குழுக்களும் அமைக் கப்பட்டு விட்டது. கழகப் பணி யாற்றவும் முதல் கடமை என உறுதியுடன் செய்யப்பட்டது.

கழகத் தலைவராக பொறுப் பேற்று 8ம் ஆண்டில் பேராற்றல் பெருவடிவமாக திகழும் தள பதி அவர்கள் தொடர்ந்து நடைப்பெற்ற 11 தேர்தல்களி லும் மாபெரும் வெற்றிப் பெற்று சாதனைப் படத்துள்ள னர். அவரின் ஓய்வில்லா உழைப்பை பார்த்து நாடே வியந்து பாராட்டுகிறது. அப்ப டிப்பட்ட பெருமைமிகு தளப தியின் ஆணையேற்று மாவட்ட செயலாளர் அவர்களின் பெரு மைமிகு உழைப்பின் பாதை யில் அனைவரும் சென்று வரு கின்ற சட்டமன்ற தேர்தலில் அனைத்து தொகுதிகளையும் வெற்றிப்பெற்றிட உழைப்பது வென்று தலைவரிடம் ஒப்ப டைப்பது என தீர்மானி க்கப் பட்டது. உள்ளிட்ட தீ ர்மானங் கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்து சாமி, வி.சிவக்குமார், த.ஜெய பாண்டியன், ஆர்.நாராயண சாமி, தங்க.ஆனந்தன், கே.ஆர். ராயர், கே.ஆர்.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், தெ.காசி ராஜன், பி.சுப்பிரமணியன், கே.ஆர்.தனஞ்செயன்,

ஆர்.விஜயசுந்தரம், ஏ.எஸ். மதியழகன், ஏ.எம்.மதியழகன், வெற்றிவேல் வி.ஜி.பி.சபாநாய கம், டி.திருமூர்த்தி,வி.பி.பாலு, பா.திருமாவளவன்,

பி.சுந்தரபாண்டியன், ஆர். கலையரசன், எம்.மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நடராஜன், ம.சோழன், வி. கோவிந்தசாமி, கே.மகேஷ், கட லூர் மாநகர செயலாளர்: கே. எஸ்.ராஜா, தலைமை செயற் குழு உறுப்பினர் வி.ஞானசேக ரன், வே.விக்கிரமன், பொதுக் குழு உறுப்பினர் கே.பி.ஆர்பால முருகன், த.ஜேம்ஸ் விஜயரா கவன்,ச.கல்யாணசுந்தரம், எஸ். பி.கண்ணன், என்.டி.கணேசன், பா.கோதண்டபாணி, ர.மஞ்சு,

கடலூர் பகுதி செயலாளர் கள்: ப.நடராஜன், பா.வெங்க டேஷ், எஸ்.சலீம், மு.இளைய ராஜா, நகர கழக செயலாளர்கள் கே.ஆர்.செந்தில்குமார், த.தமிழ்ச் செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்கொழுந்து பேரூர் செயலாளர்கள் எஸ். கணேசமூர்த்தி, கு.வே.ப. ஜெய் சங்கர், ப.மனோகரன், தேன் மொழி சங்கர், பூ.செல்வகுமார், க.பழனி,எம்.அன்வர்சதாத், மாவட்ட சார்பு அணி நிர்வா கிகள் இளைஞரணி ஜி.கார்த்தி கேயன், மாணவரணி ஆர்.சத்தி யநாராயணன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொ.பன்னீர்செல்வம், விவ சாய தொழிலாளர் அணி ம. ராமசாமி, மகளிர் அணி அமுத ராணி, மகளிர் தொண்டர் அணி ப.மனோரஞ்சிதம், பொறியாளர் அணி அப்பு.சந்தி ரசேகர்,வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி,கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை வி.எஸ். எல்.குணசேகரன்,

ஆதிதிராவிடர் நலக்குழு அணி ஆர்.பரந்தாமன், சிறு பான்மையினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி,விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்கு மார், மீனவர் அணி வீ.செல்வ பாரதி,சுற்றுசூழல் அணி ஆர். மணிவண்ணன்,அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி. தண்டபாணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக் கொழுந்து உள்ளிட்ட மாவட்ட மாநகரம்,ஒன்றியம், நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாகர்கோவில் கிருஷ்ண கோவில் சந்திப்பில் தி.மு.க. அதில் தொ.மு.ச. ஆட்டோ தொழிலாளர் சங்கம் துவக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்டோ தொ.மு.ச. அமைப்பாளர் ஜலில் தலைமை வகித்தார். தி.மு.க. மண்டல தலைவர் ஐவகர் இளைஞர் அணி அமைப்பாளர் அகஸ் தீசன் ஆகியோர் முன்னிலையில் நாகர்கோவில் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்த் பெயர் பலகையை திறந்து வைத்தார். நிகழ்வில் மாநகரத் துணைச் செயலாளர் வேல்முருகன் டாக்டர் வேல்முருகன், மாமன்ற உறுப்பினர் கலா ராணி, மாணவர் இளைஞர் அணி அமைப் பாளர் சிடி சுரேஷ், கிளை நிர்வாகிகள் ராஜசேகர், செந்தில் குமார், விஜயகுமார், மாவட்ட நிர்வாகிகள் மாய சுண்ட சுடலைக்கண், மற்றும் உதய சூரியன் ஆகியோர் உட்பட பல கலந்து கொண்டனர்.

ரேபரேலி, உத்தரப் பிரதேசம் மாநிலங்களில்

வாக்குத் திருட்டு ஆதாரங்களை விரைவில் வெளியிடுவோம்!

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி உறுதி!

ரேபரேலி,செப்.13- நாடு முழுவதும் வாக்குத் திருட்டு நடந்திருப்பது நிரூ பணம் ஆகியுள்ளதாகவும், அதனை விரைவில் அம்ப லப்படுத்த உள்ளதாகவும் மக்களவை எதிர்க்கட்சித்த லைவர் ராகுல்காந்தி தெரி வித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வாக்குத் திருட்டு நடந்ததாக மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி சில புள்ளி விவரங்களை வெளியிட் டுள்ளார். இந்நிலையில், உத்தரபிரதேச மாநிலம் ரேபரேலியில் 2 நாள் சுற் றுப்பயணம் மேற்கொண் டுள்ள ராகுல்காந்தி செய்தி யாளர்களிடம் பேசினார். அப்போது அவர், ஒன்றிய பாஜக அரசு வாக்குத் திருட்டு மூலம் ஆட்சியமைத்துள்ள தாக குற்றஞ்சாட்டினார். வாக்குத் திருட்டு விவகா ரம் தற்போது நாடு முழுவ தும் பரவியுள்ளதாகவும், இதற்கான ஆதாரங்களை விரைவில் அம்பலப்படுத்த உள்ளதாகவும் ராகுல் காந்தி கூறினார்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்!

சி.பி.ராதாகிருஷ்ணன் குடியரசுத் துணைத்தலைவராகப் பதவியேற்றார்!

பதவியேற்பு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர்கள் பங்கேற்பு!

புதுடெல்லி, செப். 13- நாட்டின் 15வது குடிய ரசு துணைத்தலைவராக சி.பி.ராதாகிருஷ்ணன் நேற்று பதவியேற்றார்.

குடியரசு துணைத் தலைவராக இருந்த ஜெக் தீப் தன்கர் கடந்த ஜூலை மாதம் 21ம் தேதி திடீரென தனது பதவியை ராஜி னாமா செய்தார். இத னைத் தொடர்ந்து செப் டம்பர் 9 ஆம் தேதி குடியரசு துணைத்தலைவர் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இத்தேர்தலில், பா.ஜ.க. கூட்டணி வேட்பாளராக சி.பி. ராதாகிருஷ்ணனும், எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி சார்பில், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதி பதி சுதர்சன் ரெட்டி ஆகி யோர் போட்டியிட்டனர். கடந்த 9ம் தேதி நடை பெற்ற குடியரசு துணைத்த லைவர் தேர்தலில் சி.பி. ராதா கிருஷ்ணன் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், நாட்டின் 15வது குடியரசு துணைத்த லைவராக சி.பி.ராதா கிருஷ்ணன் பதவியேற் றார். அவருக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, முன்னாள் குடிய ரசு தலைவர் ராம்நாத் கோவிந்த், முன்னாள் குடி யரசு துணைத் தலைவர்கள் ஹமீது அன்சாரி, வெங் கையா நாயுடு, ஜெகதீப் தன்கர், ஒன்றிய அமைச்சர் கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செஞ்சி ஒன்றியம் பாடிபள்ளம் ஊராட்சியில்

‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்,எல்,ஏ, தொடங்கி வைத்தார்!

செஞ்சி, செப். 13 - விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் பாடி பள்ளம் ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் முகாம் நடை பெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் தாட்சாயினி கார்த்திகேயன் அனைவ ரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ் தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமி ருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவு றுத்திய

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ.தொடர்ந்து முகா மில் பெறப்பட்ட மனுக்க ளுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதி காரிகளுக்கு அவர் தெரி வித்தார்.

முன்னதாக ‘உங்களு டன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் அனைத்துத் துறை சார்பில்பொதுமக்க ளிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச் சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நேரில் சென்று பார் வையிட்டு பொது மக்களி டம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து மக்கள் நல் வாழ்வு மற்றும் மருத்துவ துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகத்தினை யும்,ரத்த அழுத்தம்,நீரழிவு நோய், சர்க்கரை,நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துமாத்திரை பெட்ட கத்தினையும் முன்னாள் சங்கர், அமைச்சர் செஞ்சி மஸ் தான் எம்.எல்.ஏ. வழங்கி னார்.

முகாமில் பாடி பள்ளம், தாண்டவ சமுத்திரம், தச் சம்பட்டு, ஒதியத்தூர், ஆகிய கிராமங்களிலிருந்து ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் வட்டாட் சியர் துரைசெல்வன், வட் டாரவளர்ச்சி அலுவலர் கள் நடராஜன், பிரபா மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, ஒன்றிய கவுன்சிலர் சத்யா கார்த்திகேயன், நிர் வாகி கள் வாசு, அய்யா துரை, நாகராஜ் ,அலமேலு ராஜாராம், செந்தாமரை கண்ணன் ,மணி, ஆனந் தன், பழனி, அலெக்சாண் டர் சங்கர் கண்ணன் ஆனந்த மூர்த்தி மோகன், சுதாகர், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அபிராமிஅனை வருக்கும் நன்றி கூறினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் பாடிபள்ளம் ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்விஜயகுமார், துணைசேர்மன்ஜெயபாலன், மாவட்டகவுன்சிலர்அரங்கஏழுமலை, ஊராட்சி மன்ற தலைவர் தாட்சாயினி கார்த்திகேயன் உள்ளனர்.